## இறுதிச் செபம்:

அதிச உறுப்பினர் ஒருவரை செபம் சொல்ல அழைக்கலாம்.

## முடிவு பாடல்:

# அன்பெனும் வீணை

அன்பெனும் வீணையிலே - நல்
ஆனந்தக் குரலினிலே
ஆலய மேடையிலே - உன்
அருளினைப் பாடிடுவேன் 2



1. அகமெனும் கோவிலிலே - என்
   தெய்வமாய் நீ இருப்பாய் 2
   அன்பெனும் விளக்கேற்றி உன்
   அடியினை வணங்கிடுவேன்

2. வாழ்வெனும் சோலையிலே - நல்
   தென்றலாய் நீ இருப்பாய் 2
   தூய்மை என்னும் மலரை நான்
   தாள்மலர் படைத்திடுவேன்

3. தென்றலே கமழ்ந்திடுமே - என்
   தெய்வமே நீயிருக்கு 2
   இன்பம் மலர்ந்திடுமே - நான்
   உன்னில் வாழ்ந்திருக்க

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



# அதிசிந்தனை

## நம்பிக்கை: கிறிஸ்துவில் வல்லமை கொண்ட குடும்பம்




நோக்கம்: உறவு நிகழ்வு: பெந்தக்கோஸ்து

சமூக ஊடகப் போக்கு: #HEispower

### அறிமுகம்:

எதிர்நோக்கு (நம்பிக்கை) ஒருபோதும் ஏமாற்றம் தராது. ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது (உரோமையர் 5:5). கிறிஸ்துவின் ஆவியால் இயங்கும் குடும்பம், வாழ்நாள் முழுவதும் கடவுளின் அன்பில் வாழும். உலக மக்கள் அனைவரும், மகிழ்ச்சியும் நம்பிக்கையும் நிறைந்த குடும்பத்தை விரும்புகின்றனர். உங்களது குடும்பத்தை ஆண்டவர் எவ்வாறு பயன்படுத்த விரும்புகிறார் என்ற அவரது சித்தத்தை நாடுங்கள். பலவீனங்களை மறைக்காதீர். உங்கள் குடும்பத்தை ஆண்டவர் வழிநடத்திச் செல்ல ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தத் தயாராக இருங்கள். தொடர்ந்து செபம் செய்யுங்கள். அவரது ஆளுமைக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்படையுங்கள். உங்கள் குடும்பத்தை கடவுள் தயார் செய்கிறார் என்பதை உணர்ந்து, அவரது பணிக்குச் சித்தமாக இருங்கள்.

## தொடக்கச் செபம்:

செபம் சொல்ல அதிக உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்

## ஆரம்பப் பாடல்:

# பாடுங்கள் ஆண்டவர்க்கு

பாடுங்கள் ஆண்டவர்க்கு புதியதோர்
பாடல் பாடுங்கள் 2
அல்லேலூயா... 3

1. ஆண்டவர் தம் திருத்தலத்தில்
அவரைப் புகழ்ந்து பாடுங்கள் 2
மாண்புயர் வான் மண்டலத்தில்
அவரைப் புகழ்ந்து பாடுங்கள்

2. எக்காளத் தொனிமுழங்க
அவரைப் புகழ்ந்து பாடுங்கள் 2
வீணையுடன் யாழிசைத்து
அவரைப் புகழ்ந்து பாடுங்கள்

3. முரசொலித்து நடனம் செய்து
அவரைப் புகழ்ந்து பாடுங்கள் 2
நரம்பிசைத்து குழல் ஊதி
அவரைப் புகழ்ந்து பாடுங்கள்

## உரையாடல்:

### மரத் தட்டு

குடும்பம், அன்பு, பெற்றோர் & உறவு பற்றி உருக்கமான கதை



ஒரு வயதான கிழவர், தமது மகன், மருமகள் மற்றும் நான்கு வயது பேரனுடன் அவர்கள் வீட்டில் வாழச் சென்றார். அந்த வயதானவரின் கை நடுங்கியது, பார்வை மங்கியது, நடை தடுமாறியது. அவர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இரவு உணவை உண்டார்கள். ஆனால், அந்த வயதானவரின் நடுங்கிய கையும் மங்கிய பார்வையும் உண்பதை சிரமமாக்கியது. கை தடுமாறி உணவு தரையில் விழுந்தது. பாலும் சிந்தி, மேஜை துணியை அசுத்தமாக்கியது.

இதனைக் கண்ட மகனும் மருமகளும் எரிச்சல் அடைந்தனர். “இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்” என மகன் கூறினான். பால் சிந்துவதையும் சாப்பிடும் போது சத்தம் போடுவதையும் தரையில் உணவு சிந்துவதையும் இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாது. எனவே கணவனும் மனைவியும் சேர்ந்து, வீட்டின் ஒரு மூலையில் சிறிய மேஜையைத் தயார் செய்தனர். அந்த வயதானவர் தனியாக உட்கார்ந்து சாப்பிடும் நிலை ஏற்பட்டது. மற்றவர்கள் ஒன்றாக சேர்ந்து சாப்பிட்டு வந்தனர். வயதானவர் சாப்பாட்டு தட்டுக்களை உடைந்து விடுவதால், மரத்தட்டில் அவருக்கு உணவு பரிமாறப்பட்டது. அந்த குடும்பத்தினர் அவரைப் பார்க்கும் போது, கண்ணில் நீர் மல்க தனியாக உணவை உண்பார். ஆயினும் உணவையும் கரண்டியையும் சிந்தும் போது அவர்களின் வசை மொழிக்கு ஆளானார். இதை எல்லாம் அந்த நான்கு வயது பேரன் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் சாப்பாட்டுக்கு முன், அந்த சிறுவன் மரப்பலகையை வைத்துக் கொண்டு விளையாடுவதை அவனது தந்தை பார்த்தார். “நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” என செல்லமாக கேட்டார், தந்தை. அதற்கு, “நீங்களும் அம்மாவும் சாப்பிடுவதற்கு மரத்தட்டை செய்து கொண்டிருக்கிறேன்” என அவன் பதில் அளித்து விட்டு, தனது வேலையில் மும்மரமாக ஈடுபட்டான். அவன் கூறிய வார்த்தை பெற்றோர் இருவரை, வாயடைந்து நிற்கச் செய்தது. அவர்கள் கண்ணில் இருந்து கண்ணீர் வடிந்தது. எதுவும் பேசா விட்டால், என்ன செய்வது என்று அவர்கள் முடிவு செய்தனர். அன்றே, வயதானவரை மீண்டும் சாப்பாட்டு மேஜைக்கு அழைத்து வந்தனர். எஞ்சிய வாழ்நாள் முழுவதும் குடும்பத்தோடு சேர்ந்து உணவு உண்டார். கரண்டி கீழே விழுந்த போதும், உணவும் பாலும் சிந்திய போதும், மேஜை துணி அசுத்தமான போதும், அந்த கணவனுக்கும் மனைவிக்கும் அது பெரிதாகப் படவில்லை.

**அருகில் உள்ளவருடன் கலந்து பேசவும். மீண்டும் மற்றவருடன் கலந்து பேசவும்.**

- இந்த கதையில் உங்களைத் தொட்டது என்ன?
- அந்த நான்கு வயது சிறுவன், தமது பெற்றோருக்கும் தாத்தாவிற்கும் இடையில் நம்பிக்கையை எவ்வாறு ஏற்படுத்தினான்?
- உங்களின் சொந்த அனுபவத்தில், உங்கள் குடும்பத்தினர் இடையிலான உறவை கிறிஸ்து எவ்வாறு வலுப்படுத்துகிறார்?

## இறைவார்த்தை:

### 1கொரிந்தியர் 13:4-7

அன்பு பொறுமையுள்ளது; நன்மை செய்யும்; பொறாமைப்படாது; தற்புகழ்ச்சி கொள்ளாது; இறுமாப்பு அடையாது. அன்பு இழிவானதைச் செய்யாது; தன்னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது, மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தையும் நம்பும்; அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும்.

### சிந்தனை:

1. வாசகத்தை மீண்டும் படிப்போம். நமது உள்ளத்திலும் கடவுள் பேசுவதைக் கேட்க மௌனம் காப்போம்.
2. நம்மைத் தொட்ட வார்த்தை/வாசகம் பற்றிப் பகிர்ந்து கொள்வோம்.
3. கடவுளுடனும் ஒவ்வொருடனும் ஆழமான உறவை எவ்வாறு நாம் வளர்த்துக் கொள்வது?

### செயல்:

1. அடுத்த 7 நாட்களுக்கு குறிப்பிட்ட கருத்துக்காக தத்தம் வீடுகளில் செபமாலை சொல்லுங்கள்.

2.அதிக என்ற முறையில், அருகிலுள்ள முதியோர் இல்லங்களிலுள்ள வயதானவர்கள் & நோயாளிகளைச் சென்று கண்டு, செபம் செய்யுங்கள்.